**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஸ்ரீரங்கம்,**

**முன்னிலை : திரு.K.விஜய் ராஜேஷ், எம்.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஸ்ரீரங்கம்.**

**2026–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 28–ஆம் நாள், புதன்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 275/2019**

**CNR.NO.TNTP1900223120219**

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக ஸ்ரீரங்கம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையம், உதவி ஆய்வாளர் அவர்கள், குற்ற எண். 488/2017 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர் | எதிரிகள்:<br>1. திரு.முரளிகிருஷ்ணன் (வயது குறிப்பிடவில்லை ) த/பெ.சந்தானம்<br>2. திரு. ராஜா (வயது குறிப்பிடவில்லை ) த/பெ. பொன்னையன் |
| குற்றப்பிரிவு | இ.த.ச. பிரிவு 294(b), 323, 506(1) |
| வனையப்பட்டது | இ.த.ச. பிரிவு 294(b), 323, 506(1) |
| தண்டிக்கப்பட்டது | **எதிரிகள் ஆஜர். திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.**<br>**இறுதியாக, அரசு தரப்பில் எதிரிகள் மீது இதச பிரிவு 294(b), 323, 506(1)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை குற்றவாளி இல்லையென முடிவு செய்து கு/வி/மு/ச 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.** |
| தீர்மானம் | எதிரிகள் குற்றவாளி இல்லை |

குற்றம்சாட்டப்பட்டவர் விபரம்

| வ. எண் | பெயர் | த/பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | திரு.முரளி கிருஷ்ணன் | திரு. சந்தானம் | இந்து | கூலி | நெ.133, பென்கிரேஸ் காலனி, திம்மராயசமுத்திரம், | – |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | திருவானைக்கோவில், திருச்சி | |
| 2 | திரு.ராஜா | திரு. பொன்னையன் | இந்து | கூலி | நெ.58/65, தெற்கு உள் வீதி, திருவானைக்கோவில், திருச்சி | – |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| நிகழ்வு நாள் | : | 16.06.2017 |
| புகார் | : | 17.06.2017 |
| கைது தேதி | : | 18.06.2017 |
| பிணை விடுவிப்பு | : | 21.06.2017 |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 15.05.2018 |
| விசாரணை முடிவு | : | 28.01.2026 |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | N.A |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 15.03.2018 |
| Date of Questioning | : | 31.01.2020 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | N.A |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PWs Chief / Cross<br>(1) 10.03.2020 / 10.03.2020<br>(2) 10.03.2020 / 10.03.2020<br>(3) 25.11.2025 / 25.11.2025 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 23.01.2026 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| காலதாமதத்திற்கான காரணம் | : | Nil |

இவ்வழக்கானது திருச்சிராப்பள்ளி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3 ல் CC.No.66/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் மாறுதல் மூலம் இந்நீதிமன்றத்தில் கடந்த 31.01.2020 ம் தேதியன்று CC. No. 275/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 28.01.2026 –ம் தேதியன்று விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் **உதவி வழக்குரைஞர் நிலை 2 அவர்களும்**, எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. D. தினேஷ் பாபு அவர்களும் ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது புகார்தாரரால் குற்றவியல் விசாரணை முறைச்சட்டப்பிரிவு 173(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின்படி எழுந்த வழக்காகும்.

2. **குற்ற முறையீட்டாளரின் சுருக்கம்:–**

கடந்த 16.06.2017 ம் தேதி இரவு 10.15 மணியளவில் திருச்சி மாநகரம் ஸ்ரீரங்கம் காவல் நிலைய சரகத்திற்குட்ப்பட்ட நம்பர் –1 ராகவேந்திரா நகர் திருவானைக்கோவில் வீட்டில் வாதி கிரிபிரசாத் அவருடைய குடும்பத்தாருடன் இருந்த போது மேற்படி வாதியின் வீட்டின் கிரில் கேட் சத்தம் கேட்டு வெளியே வந்து வாதியும் வாதியனி' அம்மா அண்ணபூரணியும் பார்த்த போது அங்கு இருந்த வழக்கின் எதிரிகள் இருவரும் வாதியை பார்த்து தேவடியா பயலே எனக்கு போட்டியா பிரசாத ஸ்டாலை ஏலம் எடுக்குறீயா என்று அசிங்கமாக திட்டியும், அதை கேட்ட வாதியை 1 வது எதிரி காலால் எட்டி உதைத்தும் சாட்சி அண்ணபூரணியை முகத்தில் கையால் அடித்தும் சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், 2 வது எதிரி வாதியை கையால் முதுகில் குத்தி சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், பின்னர் இருவரும் சேர்ந்து ஆயுதங்களுடன் வந்து கொலை செய்து விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்த எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 323, 506(1) ன் கீழ் குற்றம் என்று இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு எதிரிகள் முன்னிலையான உடன் அவர்களுக்கு வழக்காவணங்களின் நகல் கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, இருதரப்பு கேட்கப்பட்டும் எதிரிகளுக்கு எதிராக கு.வி.மு.ச. பிரிவு 240(1)–ன் படி எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 323, 506(1) கீழ் அவரிடம் விளக்கி வினவியபோது எதிரிகள் பொய்வழக்கு குற்றவாளி இல்லை என கூறியதால் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **விசாரணை**:–
அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. **அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்** :–

(1) **அ.சா.1 திரு. கிரிபிரசாத்** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருவானைக்கோவிலில் வசித்து வருவதாகவும், தான் சமையல் தொழில் செய்து வருவதாகவும், ஆஜர் எதிரிகளை தனக்குத் தெரியும் என்றும், அவர்கள் தனக்கு மாமா முறையாகும் , கடந்த 16.06.2016 ம் தேதி இரவு 10.15 மணியளவில் தான் தனது அம்மா அண்ணபூரணி வீட்டில் இருந்த போது அடையாளம் தெரியத இரண்டு நபர்கள் தனது வீட்டிற்கு முன்னிலையில் தன்னையும், தனது அம்மாவையும் அடித்துவிட்டார்கள் என்றும், எதிரிகள் மீது இருந்த முன் கோபத்தால் புகார் அளித்துவிட்டேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அது அ.சா.ஆ.1 என்றும், அ.சா.1 சாட்சியம் அளித்துவிட்டு அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

(2)அ.சா.2 **திருமதி. அண்ணபூரணி** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருவானைக்கோவிலில் வசித்து வருவதாகவும், தான் சமையல் தொழில் செய்து வருவதாகவும்,

ஆஜர் எதிரிகளை தனக்குத் தெரியும் என்றும், அவர்கள் தனக்கு உடன் பிறந்த சகோதரர்கள் ஆவார்கள் என்றும், கடந்த 16.06.2016 ம் தேதி இரவு 10.15 மணியளவில் தானும் தனது மகனும் வீட்டில் இருந்த போது அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் தனது வீட்டிற்கு முன்னிலையில் தன்னையும், தனது மகனையும் அடித்துவிட்டார்கள் என்றும், எதிரிகள் மீது இருந்த முன் கோபத்தால் தனது மகன் புகார் அளித்ததாகவும், அ.சா.2 சாட்சியம் அளித்துவிட்டு அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

(3) அ.சா. 3 **திரு.மதியழகன்** தனது சாட்சியத்தில் தான் தற்போது ஸ்ரீரங்கம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையத்தில் காவல் நிலையத்தில் காவல் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இதற்கு முன்பு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு.ராஜேந்திரன் அவர்களின் கையெழுத்து தனக்கு நண்கு பரீட்சையம் வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 18.06.2017 ம் தேதி 11.00 மணிக்கு மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது திருவாணைக்கோவில் ராகவேந்திரா நகரை சார்ந்த வாசுதேவன் மகன் கிரிபிரசாத் என்பவர் கொடுத்த புகாரை பெற்று மேற்படி புகாருக்கு நிலைய மனு எண்.380/2017 வழங்கப்பட்டது பின்னர் மனு எண்.380/2017 விசாணை செய்து அன்றைய திணம் 13.30 மணிக்கு புகாரின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.488/2017 சட்டப்பிரிவுகள் 294(b), 323, 506 (i) இதசவின் கீழ் வழக்கு பதிவு பதிவு செய்துள்ளார் அந்த புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும் அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், பின்னர் அன்றைய தினம் 14.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சதீஷ்குமார், சிங்காரவேலு ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 என்றும், அந்த வரைபடம் அ.சா.ஆ.5 என்றும், பின்னர் எதிரியை தேடிவந்த நிலையில் கடந்த 18.06.2017–ம் தேதி 17 மணிக்கு திருவாணைக்கோவில் இராணியம்மன் கோவில் சந்திப்பு அருகே இருந்த எதிரி

முரளிகிருஷ்ணன் என்பவரை காரணம் கூறி கைது செய்து 17.30 மணிக்கு நிலையம் அழைத்துவந்து திரேக பரிசோதனை செய்து நிலைய பாரா வசம் ஒப்புவித்து உரிய சட்டநடைமுறைகளை பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், 2 வது எதிரி ராஜா (எ) குமார் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம் திருச்சிராப்பள்ளியில் முன் பிணை பெற்றதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், பின்னர் சம்பவத்தில் காயம்பட்ட கிரிபிரசாத், அன்னப்பூரனி ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்த ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. இளவரசன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மருத்துவவரிடமிருந்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றுள்ளார் என்றும், காயச்சான்றில் காயத்தின் தன்மை சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கியுள்ளார் என்றும், அந்த கிரிபிரசாத் அவர்களின் விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.6 என்றும், அன்னப்பூரனி அவர்களின் விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.7 என்றும், பின்னர் சாட்சிகள் கிரிபிரசாத், அன்னப்பூரனி, வாசுதேவன், சத்திய நாரயணன், சதீஷ்குமார், சிங்காரவேலு ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் காவல் உதவி ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் அவர்கள் தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 294(b), 323, 506 (i) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும், அ.சா.3 சாட்சியம் அளித்துள்ளார்.

6. **கு.வி.மு.ச பிரிவு 313–ன் படியான நடவடிக்கை:–**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றிய சந்தர்ப்பங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் படி கேள்விகள் கேட்க, எதிரிகள் அதை மறுத்துக் கூறினார்கள் . எதிரிகள் தரப்பில் சாட்சியம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

7. **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது எதிரிகள் மீது இதச பிரிவு 294(b), 323, 506(1) அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

8. **தீர்வு** :–

I) கடந்த 16.06.2017 ம் தேதி இரவு 10.15 மணியளவில் திருச்சி மாநகரம் ஸ்ரீரங்கம் காவல் நிலைய சரகத்திற்குட்ப்பட்ட நம்பர் –1 ராகவேந்திரா நகர் திருவானைக்கோவில் வீட்டில் வாதி கிரிபிரசாத் அவருடைய குடும்பத்தாருடன் இருந்த போது மேற்படி வாதியின் வீட்டின் கிரில் கேட் சத்தம் கேட்டு வெளியே வந்து வாதியும் வாதியனி' அம்மா அண்ணபூரணியும் பார்த்த போது அங்கு இருந்த வழக்கின் எதிரிகள் இருவரும் வாதியை பார்த்து தேவடியா பயலே எனக்கு போட்டியா பிரசாத ஸ்டாலை ஏலம் எடுக்குறீயா என்று அசிங்கமாக திட்டியும், அதை கேட்ட வாதியை 1 வது எதிரி காலால் எட்டி உதைத்தும் சாட்சி அண்ணபூரணியை முகத்தில் கையால் அடித்தும் சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், 2 வது எதிரி வாதியை கையால் முதுகில் குத்தி சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், பின்னர் இருவரும் சேர்ந்து ஆயுதங்களுடன் வந்து கொலை செய்து விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்த எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 323, 506(1) ன் கீழ் குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

ii) அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார். மேலும் அ.சா.3 உதவி ஆய்வாளர் சாட்சியத்தை உறுதியூட்டு விதமாக தனிநபர் எவரும் இல்லாததால் தனிநபர் எவரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், மேலும் அ.சா.3 உதவி ஆய்வாளர் அவர்களை சாட்சியத்தை மட்டுமே எதிரிகள் தான் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு செய்ய இயலாது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, அரசு தரப்பில் எதிரிகள் மீது இதச பிரிவு 294(b), 323, 506(1)– ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நீரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை குற்றவாளி இல்லையென முடிவு செய்து எதிரிகளை குற்றவாளி இல்லையென முடிவு செய்தும், கு/வி/மு/ச 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணையப்பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை என்பதால் வழக்கு சொத்தை குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 28 ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

VIJAIRAJESH K
Digitally signed by VIJAIRAJESH K
Date: 2026.01.28 03:42:31 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஸ்ரீரங்கம்.

**இணைப்பு :**

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

அ.சா 1 : திரு. கிரிபிரசாத்
அ.சா 2 : திருமதி. அண்ணபூரணி
அ.சா 3 : திரு. மதியழகன் (காவல் உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:–**

அ.சா.ஆ. 1 : 10.03.2020 புகாரில் உள்ள கையெழுத்து மட்டும்
அ.சா.ஆ. 2 : 25.11.2025 புகார் மனு
அ.சா.ஆ. 3 : 25.11.2025 அச்சு முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ. 4 : 25.11.2025 மாதிரி வரைபடம்
அ.சா.ஆ. 5 ; 25.11.2025 பார்வை மகஜர் ஆவணம்
அ.சா.ஆ. 6 ; 25.11.2025 விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்று
அ.சா.ஆ. 7 ; 25.11.2025 விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்று

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்கள்:- இல்லை**

**எதிரி தரப்பில் சாட்சிகள் :-** இல்லை

**எதிரி தரப்பில் சான்றாவணம் :-** இல்லை

VIJAIRAJESH K

Digitally signed by VIJAIRAJESH K
Date: 2026.01.28 03:42:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஸ்ரீரங்கம்.

நகல்கள்

1. மேதகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள், திருச்சி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. அரசு தரப்பில் உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை எண்.1, ஸ்ரீரங்கம்
3. காவல் ஆய்வாளர், ஸ்ரீரங்கம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையம்.